# தமிழ் இலக்கியம் இரண்டாம் ஆண்டு
# பக்தி இலக்கியமும் சிற்றிலக்கியமும்
# 18BTA44C
# அலகு 3
## ஆசிரியர் முனைவர் சோ குருசாமி

**தேம்பாவணி**

**நீர்வளம்**

பறவைகள் உலாவுகின்ற வான்வெளியில் இடங்கள் தோறும் போர் படைகளை போல வெண்மையாக உலாவுகின்ற முகில் கூட்டங்கள் வெள்ளை கொடிகளின் வடிவத்தோடு தோன்றி, தெள்ளிய

உலாவுகின்ற நீரை நிறைய உண்டு எழுந்து உயர்ந்த பரந்த வளமாக உலாவுகின்ற கருமையான மத யானை கூட்டங்கள் போல் தோன்றின.

## மின்னலும் முகில் முழக்கமும்

போரை மேற்கொண்டு பகைவரின் மார்பில் தீட்டப்பட்டு ஒளிர்கின்ற வேர் படைகளின் மேற்கொண்டு திசைகள் தோறும் இருளால் சூழப்பட்டு மிக்க ஒளிர்கின்ற முரசுகள் இன் ஒளி போல நீரை கொண்ட நீல முகில் கூட்டங்கள் மிக முழங்கின.

## மழை பொழிதல்

வெயிலோடு பொருகின்ற போர் பகை உண்டாக்க, மேகம் படைகள் போன்று சென்றதே அன்றி பின்பு அருளின்றி பொருதல் கடை என பொருந்திய அருளோடு செய்த வள்ளல்களின் கொடை தொழில் போல் செழுமையான மலைகள் தோறும் இடங்கள் தோறும் குளிரும் படியாக நெருக்கமாக மேகங்கள் மழையைப் பொழிந்தன.

## அருவி புறப்படுதல்

படித்த நூல் பொருட்களை அவையோருக்கு விரித்துரைத்த வரை போல அழகிய மலைகள் தான் குடித்த நீரை எல்லாம் அமுதம் போன்ற அருவிகள் கற்பாறைகளில் மோதி ஓசை கிளம்ப அறையை வீசின.

## அருவியின் தோற்றம்

சிறந்த பெரிய மலையை தன் இடத்திற்கு கட்டி எடுத்து செல்லுவதற்கு நினைத்து வானுலகம் விடுகின்ற வெள்ளி மடங்கள் போல மழைத் தாரைகள் ஒழுக நிலவுலகம் அதனை பொறுக்காமல் நீண்ட வெள்ளை சங்கிலியால் மலையை சுற்றி கட்டி பிடித்துக்கொண்டது. மலையில் இருந்து துள்ளி வீழ்கின்ற அருவியின் தோற்றம் இதுவே.

தெளிவாக நுரைத்து எழுகின்ற அலைகள் இடங்கள் தோறும் புகுந்து கொள்ளை அடிக்கின்ற பகைவரை போல் ஒளி நிறைந்த கதிர் பரப்பி விளக்குகின்ற மாணிக்கம் முதலிய பலவகை மணி இனங்களை எல்லாவற்றையும் இழுத்துக்கொண்டு சென்றது.

மலையிலிருந்து இறங்கிய வளமான தண்ணீர் வெள்ளத்தில் நின்று அசைகின்ற முள்ளையும் புதரில் உள்ள மணமுள்ள

மலர்களையும் கூடி பெருகி எழுகின்ற சோலையும் வயல்களையும் நிறைக்கும் பொருட்டு எல்லா இடங்களிலும் உலாவின.

அஞ்சுதல் இல்லாது தனக்கு எதிரே அடுக்கிய கல்லை எல்லாம் கடந்து குறைதல் இல்லாத அழகு விளங்கும் மருத நிலத்தையும் பின்பு ஆறு தொடர்ந்து சென்று கடலில் சேர்வது போல அறிவுடையவர் எல்லாம் அறம் பொருள் இன்பங்களை கடந்து வீடுபேற்றை அடைய வேண்டும்.

மலையில் இருந்து வருகின்ற தண்ணீரை நான்கு நிலமும் செழிக்க உண்ட பின்பும் அது கடற் போய் சேரும்.

மிகப் பரந்து ஓடும் புனலை ஏரியில் தேக்கிவைத்து வயலுக்கு பயன்படும் வண்ணம் வாய்க்கால் வழியாக நெறிப்படுத்தி மலர்கள் மிக்க வயல்கள் தோறும் பாய விடுவார்கள் அதுபோல அறம் உலாவுகின்ற நேர்மையான நெறியில் சான்றோர்கள் வழிநடத்துவர்.

அருள்குரு மிகுதியாக ஞானத்தை விளைவித்த முறைமை போல் நீர் விளைவிக்கும் நெல்லும் ஒன்று என விதைத்த உழவர்கள் விளங்குவர் பல கடைசியர்கள் குரவைக்கூத்து ஆடுகின்ற இயல்பினால் மருத வயல்களின் நிகழ்ச்சியும் தேரோட்டமும் ஒரு சிறப்புமிக்க திருவிழா போல் விளங்கும்.

நோக்க ஒளி இன்பமும் நகரமான இன்பமும் உள்ள தாமரைப்பூ வினையும் மற்ற எல்லா நீர் மலர்களையும் நீக்குவது போல் அறநெறி தவறி வரும் செல்வம் ஆக்கத்தை உண்டாக்கினாலும் கெடுதல் உடையது எனவே அதை உள் ஒழித்து விடுதல் நன்று.

செல்வச் அழுக்கடைந்த சிறிய உரை போல் பசிய நெற்பயிர் நேரே கதிர்களை தலை நிறுவி பின்பு பண்டு நிரம்பிய பெரியோர் முன்னோக்கிப் அணிவது போல முன்னே வளைதல் அந்த முத்துப்போன்ற நெற்கதிர்களை அறுத்து அந்த அறைகளை கொண்டுபோய் அவ்விடத்தில் இதுவே போர் ஆகும் என்று களிப்பு கொண்டவராய் போர்கள் பலவற்றை அவர் ஆயினர்.

மண் செயலும் துன்பமும் மிகுந்த தீமையாகும் அந்த நாட்டுக்கு புறம்பு ஆகையினால் ஒப்பில்லாத வளர்க்கின்ற அறத்தோடு பொருந்திய நாட்டில் அமைந்த அறிவுத் திற தோடு கூடிய ஆண்மை திறத்தை இயம்ப அது அளவு படுவதோ.

மறுமை அடைந்தபோது 6 வழங்கி செய்த நன்றிக்கு ஈடாக பொருள் மிகுந்த காலத்தில் கொடை கடனை மாற்றுவர்.
கரும்பு ஆலையில் எழுகின்ற புகையை முகில் என நினைத்து சோலையில் செறிந்துள்ள மயில்கள் துள்ளின.

சினம் கொண்டு நெருப்பு பொறி பறக்க தாக்கும் கடாக்கள் போல மனதில் வருத்தம் மிக பகைமை கருதும் பகைவர் தமது வாய்ச்சொல்லில் மட்டும் காட்டுகின்றோம் வணக்கம் போன்றது

கயல்விழி மாதர்கள் கடைந்த தயிரில் பெண்ணை சிறந்து எழுந்து தோன்றும் காட்சி ஆனது மேன்மையான ஆரம் பொருந்திய செயல் செய்யும் மனிதர்களின் இயல்போடு ஒப்பிட படுகின்றது.

கரும்பும் தேன் கூடும் பனையும் கனிகளும் தென்னையும் மலரும் ஆகியவற்றிலிருந்து பாய்கின்றதே பழகியபின் தண்ணீரோடு சென்று கலந்த அந்த தேனினும் மிக்க இனிமையை கலந்த இடையறாது இளம் புள்ளினங்கள் பாடும்.

குயில் இனங்களும் கொம்புகளில் அமர்ந்திருக்கின்ற கிளிகளும் வண்டுகளும் பாட துகிலின் தொகுதி போல் விரித்த தோகை கொண்ட மயிலே கூட்டத்தோடு ஒப்ப மகளிரும் ஆடுவர்.

புல்லினம் ஒலிக்கவும் மலர் எல்லாம் நெருங்கிய தும்பிகள் ஒழிக்கவும் பாடல் ஒலிக்கவும் நாவெல்லாம் புகழ்பாடும் நாடெல்லாம் இத்தகைய ஒளியே ஒலிக்கும்.

ஒன்றோடு ஒன்று மாறுபட்ட ஆட்டுக் கடாக்கள் முடிகின்ற முட்டுக்கள் மாறிமாறி ஒலித்தன சேவலும் மாறிமாறி ஒலித்தன கரும்பின் கூட்டங்கள் திரண்டு முத்துக்களை இசைத்து ஒலியெழுப்பின தேனை உண்ட வண்டுகளும் ஒலி எழுப்பின

சோலை நிழல் கண்களைக் கவர்ந்து சிறை செய்யும், கோதையர் குழல் பூக்களை முடித்து சிறை செய்யும், கானந்தர் கழலை அணிந்து கால்களை சிறை செய்வர், மருதநிலம் விழுகின்ற தண்ணீரை வரம்புகளும் சிறை செய்யும், இவையன்றி வேறு சிறை படுதல் இல்லை.

வெண்மையான நல்ல சிறகுகள் உள்ள அன்னப்பறவைகள் அரசருக்கு வரவேற்பு வழங்கின.

கிடைத்த நெல்லை சுமந்த வண்டிகளும், வெற்றிலை கட்டுக்கள் பொருந்தி இருக்கின்ற வண்டிகளும் பழங்களைக் கொண்டு வண்டிகளும் சென்றன.

பலா மா வாழை ஆகியவற்றில் இருந்து வடிந்த கனிகள் எவ்விடத்திலும் சிதறி இருந்தன.

கடலில் வாழ்கின்ற முத்து மற்றும் எல்லா வகை பொருட்களும் கடவுள் தந்த செல்வம் என்று கருதி பிறருக்கு வழங்கும் பண்பு அனைவரிடமும் காணப்பட்டது.

பொன்னும் மணியும் குவிந்தன கொடைகள் மழையோடு ஒப்பிடப்பட்டது.

நீர் நிரம்பிய இடத்தில் அன்னப் பறவைகளும் செறித்த பூ மலர்களும் அவ்விடத்தை அழகு படுத்தியது.

ஓலைகள் பொருந்திய புல்லினங்கள் குங்குமம் மா பலா சந்தனம் போன்ற பழ மர வகைகளும் மிக்க சோலைகள் பல இருந்தன.

நறுமணம் வீசுகின்ற செண்பக பூக்கள் மலர்ந்த சோலைகளும் தேனை உண்ணும் வண்டுகள் இழைக்கின்ற சத்தத்தோடு சோலைகள் காணப்பட்டன.

காண சோலையின் வேலியின் மேல் வைத்துள்ள ஆடையின்மேல் சிறந்த தேன் துளிகளை நிரல்பட அவர்கள் மிக்க சோலைகள் நீல நிறத்தால் ஒழுங்குபடுத்தி எழுதிய ஓவியத்தின் மேல் எழுதப்பட்ட விண்மீன்களை உடைய நீல வான வெளியில் தோற்றம் இதுவே.

குயிலின் கழுத்தில் பூச்சரம் தொங்கவும் வண்டுகள் குரல் உதவும் மயிலாகவும் மற்ற பறவைகள் வந்து போகும் சோலைகள் மணப்பந்தல் போல் இருந்தது.

முதிர்ந்த கனிகளும் மலர்களும் உதிர்ந்து கிடைக்கக்கூடிய பழங்களும் ஒலி செய்கின்ற குப்பைகளை உடைய இடம் ஒளி விடுகின்ற முடிகள் ஆகியவற்றை கழைந்துவிட்டு அரசர்கள் மிகுந்த செல்லுகின்ற இடங்களைப் போல அந்த சோலைகள் இருந்தன

வெள்ளை நிற ஆட்டுக்கடாக்களும் தலை மான்களும் புலிகளும் எருமைகளும் நெடுங்காலம் தமிழ் போர் செய்தலில் நான் சோலைகள் சிலம்பு போர்க்களம் போல காட்சியளித்தது.

பறவைக் கூட்டங்களின் ஆரவாரம் ஓசைகள் வந்து பள்ளிக்கூட பாலகர்கள் அரங்கில் ஓதும்போது எழுகின்ற ஒலி வகைகளை ஒத்து இருந்தன.

மாங்குயில் பாட வண்டுகள் வீணை மீட்ட மயில் நடனம் ஆட மற்ற பறவைகள் காண்கின்ற சோலை நாடகசாலை போல இருந்தது.

மயில்கள் முறை முறையாக மாறி மாறி எதிராக அஞ்சனம் கருங்குரங்கு குதிரையில் ஏறி ஆரிய கூத்தாடி கொண்ட சோலைகள் இருந்தன.

நீர் தடாகமும் குவளை மலர்கள் கண் விழித்து பார்த்து பூத்து பார்ப்பதற்கு இடம் தேடி புறப்படுவது போல அலைந்து நெருங்கி மோத இடையிடையே முல்லை தரையிலிருந்து சிரித்து பூத்து நெடும் பார்த்து கொட்டாவி விடுவது போல பூக்கள் மலர்ந்தன.

மாதர்கள் வர அவர்களின் அழகுக்கு தோற்ற மயில்கள் அவர்கள் வென்றார் என்று நானே ஒடுங்கி அதுகண்டு சிரிப்பது போல் பறவைகள் ஒலி செய்யும் அந்த நாட்டு சோலை இடங்கள் எல்லாம் இருந்தன.

அப்படி வந்த மகளிரை ஞாயிற்றின் கதிர்கள் அந்த குயில் போற்றுவது போல பாட அன்னம் நடை படிப்பது போல் முன் நடக்க அந்த நடையை பறிப்பது போல அவர்கள் நடந்தனர்.

செங்கதிர் வந்தார் போல மங்கையர்கள் வந்தனர் மலர் கொள்ளை போவது கருவண்டு கூவுகின்ற இந்த ஓசை கிளி கண்டு வருந்துவது போல இருந்தது.

மணி பவளமும் முத்தும் பொன்னும் பூத்தாற்போல அழகிய மலர்களை எல்லாம் போலி உள்ள நூலகங்கள் அளவுக்கு பொருத்தமாக கட்டுவார்கள்.

மலர்த்தேன் உண்டு பசி தீர்ந்தபின் வண்டுகள் பாட மனமுருகி மங்கைமார் களும் களிகூர்ந்து பாடினர்.

தாமரையின் மேல் வைத்திருக்கும் அண்ணன்கள் நான மலர் மாளிகையின் மேல் இருந்து அறத்தைப் போற்றி பாடுவாய் இருந்தனர்.

மெய் வாய் கண் மூக்கு செவி ஆகிய ஐந்து இருக்கும் நிழலும் தேனும் நிறமும் மணமும் இசையும் ஆகியவை விளங்கும் சோலைகள் நிறைந்து இருந்தன.

கல்வர் பகையின்றி செண்பக மரத்தின் குளிர்ந்த நிலையில் உயிர் கொள்ளும்படி துன்பம் நீங்கி பிற நாட்டவர்க்கும் விருப்பம் உண்டாகும் படி அந்த சோலைகள் விளங்கின.

ஆளை முழக்கமும் வண்டி முழக்கமும் பாடல் விளக்கம் சங்கம் வழக்கமும் கடைகளின் விழாக்களும் மின்னலுடன் மழை பெய்கின்ற முழக்கங்களும் மங்கையர் மூலத்தால் உண்டாகும் உலகமும் எருமைகள் படுவதால் உண்டாகும் நீர் முழக்கம் எங்கும் முழங்கின.

சோலையில் முனிவர் தாமரை மலரில் அன்னம் மலரில் வண்டுகள் கிளைகளில் விழிகள் நாவில் பாவினம் மங்கையர் கையில் வீணை எங்கும் இறைவன் வாழ்த்தாக இருந்தது

உலக வளமெல்லாம் பூவோடு பொருந்திய அழகினால் நம் உயர் விருப்பத்திற்கும் நாவின் உயர் புகழுக்கு மேலான நாடாக அது விளங்கியது.

அருந்தவும் பொருந்துதலால் இரண்டும் இல்லை யாவரும் அருந்தும் வண்ணம் கொடுத்தால் வறுமையும் இல்லை அறநெறியை மேற்கொண்ட மென்மையான சிறுமையும் இல்லை செல்வம் நிறைந்த வாழ்க்கையால் குறைவும் இல்லை.

வள்ளல்கள் இடம் சென்றால் மேகங்கள் பொழிந்த மழையைப் போல் நிறைய கொடை கொடுப்பர். குருமார்கள் தேன் மழை பொழிந்தது போல குற்றமற்ற சொல் மழை பொழிவார்கள்.

உலகத்திற்கு ஒரு அணிகலன் போல் செல்வம் போன்று விளங்கும் செழிப்புமிக்க அந்த பெரிய நாட்டில் மார்பிலே போன்ற ஓர் அழகிய பெரிய மணியை போல அழகு பொருந்திய நகரத்தின் சிறப்பு இயல்பினை புகழ்ந்து சொல்வோம்.